**செய்தி வெளியீடு எண்: 799** **18.9.2010**

**பத்திரிக்கை செய்தி**

புயல், வெள்ளம் வறட்சி போன்ற இயற்கை சீற்ற பாதிப்பு ஏற்படும் போதும், பூச்சி மற்றும் நோயினால் பயிருக்கு சேதம் ஏற்படும் போதும் விவசாயிகளுக்கு காப்பீடு மற்றும் நிவாரண உதவி அளிக்க தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் மாநில அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் தானியப் பயிர்கள், பயறு வகைகள், எண்ணெய்வித்துப் பயிர்கள், கரும்பு, பருத்தி மற்றும் தோட்டக்கலைப்பயிர்கள் காப்பீடு செய்யப்படுகிறது.

இயற்கை இடர்பாடுகளால் பயிருக்கு சேதம் ஏற்படும் போது, இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்த விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு வழங்கப்படும் தொகையினை மத்திய அரசு 50 சதவீதமும், மாநில அரசு 50 சதவீதமும் வழங்கி வருகிறது.

இதன்படி இவ்வரசு பொறுப்பேற்ற பிறகு, கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின் கீழ் இழப்பீட்டுத் தொகையாக ரூ.944.08 கோடி வழங்கப்பட்டு 8,61,822 விவசாயிகள் பயன் பெற்றனர்.

2008–2009ஆம் ஆண்டில் இயற்கை இடர்பாடுகளால் சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கரூர் மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மிளகாய் பயிர் காப்பீடு செய்த 15,102 விவசாயிகளுக்கு முதல்முறையாக இழப்பீட்டுத் தொகையாக ரூ.11.37 கோடியும், 2009–10ஆம் ஆண்டில் இயற்கை இடர்பாடுகளால் திருவண்ணாமலை, கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, திருச்சி, வேலூர், நாகப்பட்டினம், விழுப்புரம், காஞ்சிபுரம், தேனி, திருவள்ளூர் மற்றும் திருவாரூர் ஆகிய 12 மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களுக்கு பயிர் காப்பீடு செய்த 24,719 விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகையாக ரூ.18.75 கோடியும் ஆக மொத்தம் ரூ.30.12 கோடி வழங்கப்பட உள்ளது.

முதற்கட்டமாக மாநில அரசின் பங்கான ரூ.9.46 கோடியை உடனடியாக விவசாயிகளுக்கு வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இத்தொகையுடன் இந்திய வேளாண் பயிர் காப்பீட்டு கழகத்தின் 50 சத பிரிமியத் தொகையான ரூ.5.60 கோடியும் சேர்த்து ரூ.15.06 கோடி பாதிக்கப்பட்ட 39,821 விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

வீரபாண்டி எஸ். ஆறுமுகம்,
**வேளாண்மைத்துறை அமைச்சர்**

**வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**